மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் (திருமதி) பூங்கோதை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த வருடம் தொண்டு நிறுவனங்களுடன் இணைந்து 30 மாவட்டங்களில் தலா ஒரு முன்பருவக் கல்விப் பள்ளி மன வளர்ச்சி குன்றியோருக்காகத் தொடங்கப்பட்டுள்ளது. அதேசமயம் 7 மாவட்டங்களில் 14 வயதுக்கு மேற்பட்ட மன வளர்ச்சி குன்றியோருக்கான சிறப்புப் பள்ளிகள், தொழிற்பயிற்சி, தங்குவதற்கு வசதிகள் நிறுவப்பட்டுள்ளன என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன். கடந்த வருடம் முதல் உறுப்பினர் கூறியதுபோல 500 ரூபாய் வழங்கப்படுகிறது. கடந்த ஆட்சிக் காலத்தில் வெறும் 200 ரூபாய்தான் வழங்கப்பட்டு வந்தது. நமது முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள், 200 ரூபாயிலிருந்து 500 ரூபாயாக உயர்த்தி, (மேசையைத் தட்டும் ஒலி) இதற்காக மட்டும் 18 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்து, 31,000 மன வளர்ச்சி குன்றியவர்கள் பயனடைகிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொண்டு, இத்திட்டம் நமது மாநிலத்தைத் தவிர இந்தியாவிலே வேறு எந்த மாநிலத்திலும் செயல்படுத்தப்படவில்லை என்பதைப் பெருமையோடு தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 99, மாண்புமிகு உறுப்பினர் திரு. ந. சுப்ரமணியன், மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

99—

வீட்டுமனைப் பட்டா

*20781—திரு. ந. சுப்ரமணியன்:

மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

குளத்தூர் தொகுதி, விராலிமலை ஊராட்சி ஒன்றியம், மேபூதக்குடி ஆதி திராவிடர்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திருமதி ஆ. தமிழரசி, ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

குளத்தூர் தொகுதி, விராலிமலை ஊராட்சி ஒன்றியம், மேபூதக்குடி ஆதி திராவிடர்களுக்கு இலவச வீட்டுமனைப் பட்டா வழங்க

2008 ஏப்ரல் 11]

பொருத்தமான நிலங்கள் அக்கிராமத்தில் இல்லாததால் அக்கிராமத்தின் எல்லையை ஒட்டிய வருவாய் ஊராட்சி எல்லைக்குட்பட்ட பகுதியில் தகுதியான புன்செய் நிலங்கள் தேர்வு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ந. சுப்ரமணியன்.

திரு. ந. சுப்ரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விராலிமலை ஊராட்சி ஒன்றியம், மேபூதக்குடி ஊராட்சியில் சுமார் 68 குடும்பத்தினர் 40 வீடுகளில் வசித்து வருகிறார்கள். ஏற்கெனவே, 15, 20 ஆண்டுகளுக்கு முன்பாகவே 40 குடும்பங்களாக இருக்கும்போதே அவர்கள் அங்கு வசிப்பதற்கு இட நெருக்கடி இருந்தது. எனவே, இப்போது குறிப்பிட்டுள்ள அந்த இடத்தில் வெகு விரைவில் அவர்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்கிட வேண்டும்.

இதேபோன்று, குன்னத்தூர் ஊராட்சி, பழைய பிடாரம்பட்டியில் உள்ள 25 தொகுப்பு வீடுகள் முழுவதும் இடிந்துவிட்டன. அதிலிருந்த மக்கள் குடியிருக்கும் அந்த இடம் கோயிலுக்குச் சொந்தமான இடம் என்பதால், அருகிலுள்ள கல்லாங்குத்துப் புறம்போக்கு இடத்தில் மேற்படி 25 நபர்களுக்கும் வீட்டுமனைப் பட்டா கொடுக்க இந்த அரசு முன்வருமா என்பதையும் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திருமதி ஆ. தமிழரசி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதுக்கோட்டை மாவட்டம், இலுப்பூர் வட்டம், மேபூதக்குடி கிராமத்தில் சுமார் 45 குடும்பங்கள் வசித்து வருகின்றன. இவர்கள் அனைவருக்குமே நத்த புல எண் 69-ல் வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கப்பட்டுள்ளன. அந்த 45 குடும்பங்களில் 26 குடும்பங்களுக்கு அரசால் இலவசக் காலனி வீடுகள் கட்டிக்கொடுக்கப்பட்டுள்ளன. மீதமுள்ள நபர்கள் சொந்தமாக வீடுகட்டிக் குடியிருந்து வருகிறார்கள்.

முற்பகல் 10-30

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் முன்னனுமதியுடன் வினாக்கள்—விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

மாண்புமிகு திருமதி ஆ. தமிழரசி: மேற்காணும் 45 குடும்பங்களின் வாரிசுதாரர்கள் அல்லது பிள்ளைகள் திருமணம் செய்து கூட்டுக் குடும்பமாக வசிப்பவர்கள். இந்த 29 நபர்களும் வீட்டுமனைப் பட்டா இல்லாமல் இருக்கிறார்கள். அவர்களுக்குத் தகுதியான இடம் தேர்வு செய்யப்படும். மேபூதக்குடியை ஒட்டி அமைந்துள்ள வருவாய் ஊராட்சி எல்லைக்குட்பட்ட பகுதியில் வீட்டுமனை இல்லாத அந்த 29 நபர்களுக்கும் தகுதியான புன்செய் நிலங்கள் தேர்வு செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். அதுமட்டுமல்லாமல், நம்முடைய புதுக்கோட்டை மாவட்டத்தில் மட்டும் கடந்த 2006-2007-ல் 225 நபர்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்கப்பட்டிருக்கிறது. அதேபோல், 2007-2008-ல் மாண்புமிகு குளத்தூர் சட்டமன்ற உறுப்பினர் தொகுதியில் உள்ள திருநல்லூரில் 33 நபர்களுக்கு வீட்டுமனைப் பட்டாவும், மாராயப்பட்டியில் 69 நபர்களுக்கும், ஆக மொத்தம் 102 நபர்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்க தயாராக இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன், மாண்புமிகு உறுப்பினர் குன்னத்தூர் ஊராட்சியில் வீட்டுமனைப் பட்டா வேண்டுமென்று கோரிக்கை விடுத்துள்ளார்கள். அதையும் இந்த அரசு பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ந. சுப்ரமணியன்.

திரு. ந. சுப்ரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த ஆறு மாதத்திற்கு முன்பாகவே அங்கு மனு நீதி நாள் முகாம் நடக்கும்போது குன்னத்தூரில் வசிக்கின்ற 25 ஆதி திராவிட மக்களும் அந்தக் கல்லாங்குத்துப் புறம்போக்கை தங்களுக்கு வீட்டுமனைப் பட்டா செய்து வழங்கவேண்டும் என்று கோரினார்கள். இதுநாள் வரையிலும் அவர்களுக்குப் பட்டா வழங்கப்படவில்லை. எனவே, அந்த 25 ஆதி திராவிட பெருமக்களுக்கும் கல்லாங்குத்து புறம்போக்கு இடத்தில் வீட்டுமனைப் பட்டா வழங்க இந்த அரசு விரைந்து நடவடிக்கை எடுக்குமா என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திருமதி ஆ. தமிழரசி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கோரிக்கையைப்

2008 ஏப்ரல் 11]

பரிசீலித்து தலைவர் கலைஞர் அவர்கள் அந்தப் பகுதிக்கு வீட்டுமனைப் பட்டா வழங்குவார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.ஏ. செங்கோட்டையன்.

திரு. கே.ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆதி திராவிடர்களுக்காக நிலங்களை நாம் ஆர்ஜிதம் செய்கிறபோது, அந்த நிலத்தினுடைய மதிப்பீட்டை அதிகமாகச் சொல்கின்ற காரணத்தினாலே, அரசு நிர்ணயிக்கின்ற விலையில் கொடுக்க முடியாத சூழ்நிலை ஏற்படுவதன் காரணமாக, பல இடங்களில் அப்பணியில் தடை ஏற்படுகிறது. அரசு நிர்ணயித்து இருக்கிற விலைக்கும் அங்கே விற்பனை விலைக்கும் ஏறத்தாழ 50 மடங்கு வித்தியாசம் இருக்கிற காரணத்தாலே நிலம் கொடுக்க மறுக்கிறார்கள். ஆகவே, அதைப் பரிசீலனை செய்து அந்தப் பகுதிகளிலே உள்ள விலையேற்றத்திற்கேற்ப விலைகளை உயர்த்தித் தருவதற்கு ஒரு கொள்கை முடிவு எடுத்து, அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா என்பதை உங்கள் மூலமாக அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திருமதி ஆ. தமிழரசி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆதி திராவிட இன மக்களுக்கு ஆட்சேபணையற்ற புறம்போக்கு நிலங்கள் இருந்தால் அந்தப் பகுதியில் வீட்டுமனைப் பட்டா வழங்கப்பட்டு வருகிறது. மேலும், அரசின் விதிமுறைகளின்படி சந்தையின் மதிப்புப்படி, வழிகாட்டுப் பதிவேட்டின் நில மதிப்பின் அடிப்படையில் எது குறைவோ அதன் அடிப்படையில் இடம் கையகப்படுத்தப்பட்டு கொடுக்கப்பட்டு வருகிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அந்த நில மதிப்பை அதிகரித்துத் தரும்படி கேட்டிருக்கிறார்கள். தலைவர் கலைஞர் அவர்களின் கவனத்திற்கு எடுத்துச்சென்று பரிசீலித்து அவர்களின் வழிகாட்டுதலின்படி நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. குருசாமி.

திரு. செ. குருசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தியூர் தொகுதியில் அந்தியூர் ஒன்றியம், சங்கராபாளையம் மற்றும் சின்னத்தம்பிபாளையம் போன்ற ஊராட்சிகளில் ஆதி திராவிட நலத் துறையின் மூலமாக வீட்டுமனைக்காக நிலம் கையகப்படுத்தப்பட்டு பட்டாவும் வழங்கப்பட்டுள்ளது. ஆனால், இதுவரையில் அந்த நிலத்தை சர்வே செய்து மக்களுக்கு இடத்தை கொடுக்காத காரணத்தினாலே அந்த நிலதததை நில உரிமையாளர்களே இன்னும் உழுதுகொண்டிருக்கிறார்கள். ஆகவே, அரசு அந்த வீட்டு நிலத்தை அளந்து அவர்களுக்கு வீட்டுமனைப் பட்டாவாக வழங்குமா என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திருமதி ஆ. தமிழரசி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உறுப்பினர் அவர்களின் கோரிக்கையை ஏற்று அதை உடனடியாகப் பரிசீலித்து அப்பகுதி மக்களுக்கு நிலம் அளந்து கொடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொண்டு, அவருடைய ஈரோடு மாவட்டத்தில் மட்டும் தலைவர் கலைஞர் அவர்கள் 5-வது முறையாக ஆட்சிப் பொறுப்பேற்று, இதுவரைக்கும் 339 நபர்களுக்கு விட்டுமனைப் பட்டா 2007-2008-ல் வழங்கப்பட்டிருக்கிறது. அதேபோல், உறுப்பினர் அவர்களின் கோரிக்கையை ஏற்று இதிலும் உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 100, மாண்புமிகு உறுப்பினர் திரு. அக்ரி. எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி, மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் அவர்கள்.

100—

பால் குளிரூட்டும் நிலையம்

***34630—திரு. அக்ரி. எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி:**

மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கலசப்பாக்கம் தொகுதி, கலசப்பாக்கத்தில் பால் குளிரூட்டும் நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?